ஸ்ரீதந்வந்த்ரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

ஸாதாரண
கார்த்திகை

DECEMBER
1970



தொகுதி 32
பகுதி 12

Vol. 32
No. 12

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராம சர்மா.

பிரகாசகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

| | | |
|---|---|---|
| பிரதமரின் பேச்சு | ... | 233 |
| கிராமங்களில் சுதேசி வைத்தியம் விரிவடைய வேண்டும் | ... | 235 |
| ஸஹஸ்ரயோகம் | ... | 237 |

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

## வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

### கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - மேனேஜிங் டிரஸ்டி - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31

நர்ஸிங்ஹோம் போன் நெ. 44

தலைமை வைத்யர் போன் நெ. 25

மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ 27

மானேஜர் (வீடு) போன் நெ. 26

**சென்னை கிளை :**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள் :**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணுகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு விற்பனை டிப்போ:
31, A. சின்னக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2.

Phone No. 4202

வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த
ஆயுர்வேத மருந்துகளும் தயாரித்து
வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன்
குறைந்த விலையில் மொத்தமாகவும்,
சில்லரையாகவும் கிடைக்கும்.

## எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும் மருந்துகளின்
செய்முறையை விளக்கும்

# ஔஷத யோக ஸங்கிரஹம்

### முதல் பாகம்

பிரதி விலை ரூ. 5-00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங்டைரக்டர்.

GRAM : KALIA
Phone: Off. 3232, Res. 4343

# KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS

JULLUNDUR CITY. (INDIA)

| Price List | | Rs. ps. |
|---|---|---|
| Pure Musk | per gram | 50-00 |
| Pure Saffron | | 2-00 |
| Pure Gorochanam | per gram | 9-00 |
| Pure Pearls Spl. | ,, | 10-00 |
| ,, No. 2 | ,, | 7-00 |
| ,, No. 3 | ,, | 4-00 |
| Pure Ambar No. 1 | ,, | 3-50 |
| ,, No. 2 | ,, | 2-50 |
| ,, No. 3 | ,, | 2-00 |
| Pure Silver Leaves | ,, | 0-80 |

## PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni | per gram | 0-30 |
| Singapuri (Yellow) | ,, | 0-25 |
| German or Japan | ,, | 0-20 |
| Powder Pachakarpuram | | 0-06 |
| Pure Menthol | ,, | 0-45 |
| Pure Thymol | ,, | 0-20 |
| Ashtavargam | per Kilo | 7-50 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kshir Kakoli | ,, | 8-00 |
| Ridhi Vridhi | | 12-00 |
| Silajit (Kalmodam) | | |
| Suryatapi Silajit No. 1 | ,, | 100-00 |
| No. 2 | ,, | 85-00 |

## CRUDE DRUGS

| | | |
|---|---|---|
| Attis Bitter | ,, | 100-00 |
| Beedana | ,, | 20-00 |
| Guggulu Shudh | ,, | 12-00 |
| Gowela | ,, | 60-00 |

| Price List | | Rs. Ps. |
|---|---|---|
| Kuth No. 1 | per Kilo | 5-00 |
| Moosli White | ,, | 15-00 |
| Pushkar mool | ,, | 5-00 |
| Rose Flower Dry | ,, | 10-00 |
| Som Lata | ,, | 10-00 |
| Salib Panja | ,, | 85-00 |
| Salib Gatha | ,, | 20-00 |
| Shingraf | ,, | 300-00 |
| Tiger's Fat | ,, | 45-00 |
| Bears Fat | ,, | 40-00 |
| Pure Vanslochan | ,, | 80-00 |

## AYURVEDIC MEDICINE

| | | |
|---|---|---|
| Chander Prabha | per Kilo | 70-00 |
| Chavan prash | ,, | 10-00 |
| Gudoochi Sattoo (Sindi Maw) | ,, | 12-00 |
| Ras Sindur | ,, | 300-00 |
| Shudh parad | ,, | 300-00 |
| Swaran Vang | ,, | 200-00 |
| Yogaraj Guggulu | ,, | 30-00 |
| Kaishore ,, | ,, | 30-00 |
| Maha Yogaraj ,, | ,, | 140-00 |
| Abrak Bhasam | ,, | 200-00 |
| KantLoh Bhasam | ,, | 85-00 |
| Loh Bhasam Special | ,, | 150-00 |
| Shring Bhasam | ,, | 35-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Mandur Bhasam | ,, | 35-00 |
| Silajit Bhasam | ,, | 35-00 |
| Silver Bhasam | ,, | 700-00 |
| Swaran Makshik | ,, | 80-00 |
| Sulphur Purified | ,, | 50-00 |
| Tamber Bhasam | ,, | 300-00 |
| Sidh Makar Dhwaj | per gram | 4-20 |
| Makar Dhwaj ordinary | | 0-80 |

Please ask for detailed Price List 6¼% Commission to the readers of Vaidya Chandrika

தந்தி : "அம்ருதம்" P. B. No. 1382. போன் : 26006

# ஸ்ரீ ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD. AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

எங்களுடைய கிளைகள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | 23 B, பூஸா ரோடு, புது டில்லி : | போன் ; | 585687 |
| 2. | மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, | 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, | 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-18 | ,, | 32988 |
| 5. | பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 | ,, | 92 |
| 6. | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, | 195 |
| 7. | கடைவீதி, பொன்னுனி | ,, | 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1 | ,, | 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, | 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | ,, | 33758 |
| 12 | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, | 4891 |
| 13. | 229, ராஜவீதி, கோயமுத்தூர்-1 | ,, | 33988 |
| 14. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2 | | |
| 15 | No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னுனி) | | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங்ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

## வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும்:

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00; 12 ML. ரூ. 3–75

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

**அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,**

சைனபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE: 5441 வீடு போன்: 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHALLA BROTHERS (Regd.)**

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

உயர்ந்த கஸ்தூரி, குங்குமப்பூ,
பச்சைகர்பூரம் முதலியவைகளுக்கு
மிகவும் சிறந்த இடம்.

Wholesale Dealers in:
Musk Saffron and Ayurvedic Drugs etc.

CORRESPOND IN HINDI OR ENGLISH

**Shri Markanday Musk Depot**

(Regd.)

Importers and Exporters

Civil Lines, LUDHIANA, PUNJAB.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS**

(REGD.)

**Wholesale Musk, Saffron and Indian Drugs Merchants,**

**LUDHIANA - PUNJAB**

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

***K. L. TALWAR & BROS.,***

MUSK MERCHANTS,

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.



# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 32 | சாதாரண கார்த்திகை | பகுதி 12 |
| Vol. 32 | 1970 டிசம்பர் | No. 12 |


நமச் சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।

यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

## பிரதமரின் பேச்சு

பண்டைய காலத்தில் அரசனுடன் நெருங்கிப் பழகும் இயல்புடைய விதூஷகன் என்பவன் ஒருவன் உண்டு. அவன் பேச்சு ஹாஸ்யத்தையே முக்யமாகக் கொண்டதாக இருக்கும். ரஹஸ்யங்கள் சில அவனுக்கும் தெரியக்கூடாது. தெரிந்தால் அவன் மூலம் மற்றவர்களுக்குத் தெரிந்துவிடும். ஆகவே அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அந்த விதூஷகனுக்கு ஏதாவது ஆசை வார்த்தை காட்டி அவனை அப்புறப்படுத்துவது வழக்கம்.

மஹாகவி காளிதாஸனின் சாகுந்தல நாடகத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி. ஒரு நாள் அம்மாதிரியான சந்தர்ப்பத்தில் ராஜா விதூஷகனிடம் கூறுகிறான். "இன்று சதுர்த்தி. மகாராணி

விரதம் அனுஷ்டிப்பாள். நீ சென்ருல் உனக்கு கொழுக்கட்டை நிறைய கிடைக்கும்" என்று. அதற்கு விதூஷகன் "தங்கள் வாக்கு பலிக்க வேண்டும். அது நீடூழி வாழட்டும்" என்று ஆசீர்வாதம் செய்தான். அதாவது ஆசை வார்த்தைகளாக இருக்கக்கூடாது. கொழுக்கட்டைகள் நிறைய கிடைக்க வேண்டும் என்பது அதன் கருத்து.

தற்சமயம் மேலிடத்துப் பேச்சுக்களுக்கு நாம் அந்த மாதிரி ஆசி கூறவேண்டிய நிலை உள்ளது.

சென்ற மாதம் 7ம் தேதி பாட்டியாலாவில் நடைபெற்ற அகில பாரத ஆயுர்வேத மகா நாட்டைத் துவக்கி வைத்து நமது பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் பேசியிருப்பது முற்றிலும் நடைமுறைக்கு வரவேண்டும் என்று விரும்புகிரேம். இதற்கு முன்பு இம்மாதிரி மேடைகளில் தோன்றிய மேலிடத்துப் பேச்சுக்கள் பலவும் புஸ்வாணமாகப் போயிருக்கின்றன. அம் மாதிரி இல்லாமல் பிரதமர் பேச்சு பலித்தால் தேசீய வைத்யம் செழிக்க ஏது உண்டு. தேவையான இடங்களில் மேனுட்டு முறைகளையும் கையாள வேண்டும் என்பது உண்மையே. ஆனுல் அது மேனுட்டு வைத்யமாகத் தோன்ருதபடி இந்திய வைத்யமாக மாற்றி உபயோகிப்பதுதான் இந்திய வைத்ய அபிவிருத்திகு நல்லது. இந்திய வைத்யத்தில் எல்லா பாகங்களும் எல்லா மருந்துகளும் உண்டு. ஆனுல் அவைகளுக்கு விரிவுரைகள்தான் தேவை. சில பயிற்சிகளும் அவசியம். தற்பொழுது அவசியமானுல் தனி இந்திய வைத்யப் படிப்பை முடித்துக்கொண்டு பிறகு மேனுட்டு வைத்யத்தில் சில பாகங் களைப் பழக வசதி செய்து கொடுப்பதே சிலாக்யம். கலப்படப் படிப்பாக ஏற்படுத்தினுல் காலக்ரமத்தில் இந்திய வைத்யத்தில் ஊக்கம் குறைந்து ஆங்கில வைத்யம்தான் ஓங்கும் அதற்கு இடம் கொடுத்து ஏற்கனவே பல ஸ்தாபனங்கள் ஆங்கில வைத்யக் கல்லூரிகளாக உருமாறிவிட்டன. இம்மாதிரி ஏற்படா மல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மற்றும் பிரதமர் பேச்சை வெளியிட்டுள்ளோம். அதைப் படித்தால் விளங்கும்.

---

# கிராமங்களில் சுதேசி வைத்தியம் விரிவடைய வேண்டும்

## ஆயுர்வேத மகாநாட்டில் பிரதமர் துவக்கவுரை

பாட்டியாலா, நவம்பர் 7—ஆயுர்வேத வைத்திய முறையை இந்தியாவின் பழங்கால நினைவுச் சின்னமாக இந்திய அரசு நினைக்கவில்லை என்றும், தற்காலத்தில் மக்களுக்கு உதவக்கூடிய அறிவியல் துறையாகவே மதிக்கிறது என்றும் பிரதமர் இந்திரா காந்தி அகில இந்திய 46-வது ஆயுர்வேத மகாநாட்டை இங்கு துவக்கி வைத்துப் பேசுகையில் இன்று கூறினார்.

மேனாட்டு வைத்திய முறையில் ஏற்பட்டுள்ள நவீன கால முன்னேற்றங்களையும் அவசியமான இடங்களில் ஆயுர்வேதிகள் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், அப்போதுதான் மேனாட்டு வைத்திய முறையுடன் போட்டிபோட முடியும் என்றும் கூறினார்.

ஆயுர்வேத பாடத் திட்டங்களைப் புதுப்பிக்க வேண்டும், ஆயுர்வேத வைத்தியத் தொழிலில் உறுதியான ஒழுங்கு நியதிகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். கிராமங்களில் சுதேசி வைத்திய வசதி விரிவடைய வசதிகள் செய்து கொடுக்கப்படுவதும் அவசியம் என்றும் பிரதமர் கூறினார்.

ஆயுர்வேதத்தில் சிற்சில பகுதிகளில் சில விசேஷ சிகிச்சை முறைகள் அனுபவத்தில் உள்ளன என்றும், ''அல்லர்ஜி'' என்று மேனாட்டு வைத்தியத்தில் குறிக்கப்படும் நோய்களுக்கு ஆயுர் வேதத்தில் பல நல்ல மருந்துகள் இருப்பதாகக் கூறப்படுகிறது என்றும் இதைப்பற்றி ஆராய வேண்டும் என்றும் கூறினார்.

தக்ஷசீலம் பகுதியில் உள்ள ஒவ்வொரு செடியும், தாவரமும் மருந்து உபயோகமுள்ளவையே என்று சரக ஸம்ஹிதையில் கூறப்பட்டிருப்பதை நினைவுப்படுத்தி, தாவரங்களின் மருந்து இயல்புகளை மீண்டும் விரிவாக ஆராயவேண்டும் என்றும், மூலிகைகளை அடையாளம் காண்பதற்கு செடி, கொடிகளை அடையாளம் கண்டுபிடிக்கும் பழக்கத்தை சிறு வயதிலிருந்தே ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

மேனாடுகளில் பெருந்தொழில் வளர்ச்சியால் காற்றும் நீரும் கானகமும் தொழில் கழிவுப் பொருட்களால் விஷமாகி வருகிறது என்றும், இதை உணர்ந்து இயற்கை ஒட்டிய வாழ்க்கைக்குத் திரும்ப அங்கு முயற்சி துவங்கப்பட்டிருக்கிறது என்றும், மூலிகை வைத்தியத்தில் அக்கறை பிறக்கத் துவங்கியிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

---

## மஹா மண்டலம் மதுரைக்கிளை

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மதுரைக்கிளையில் சென்ற 29—11—1970 அன்று நடந்த மாதவாரிக் கூட்டத்தில் வைத்ய ஸ்ரீ S வேலாயுதம் அவர்கள் தலைமையில் ஸ்ரீ P. V. ராகவவாரியர், ஸ்ரீ C. K. ஸ்ரீதர் முதலானோர் ஆயுர்வேத சிகித்ஸை முறையைப்பற்றிய கருத்தரங்கில் பங்குகொண்டனர். மிகச் சிறப்பாகக் கருத்துரைகள் நிகழ்ந்தன.


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

# ஸஹஸ்ரயோகம்

## முகரோக சிகித்ஸை - (தொடர்ச்சி)

அதிமாப்ஸத்தை அறுத்துத் தேனில் பொடியைக் குழைத்துத் தேய்க்கவும். வசாதேஜோவதீத்யாதி தைலத்தால் கபளம் செய்யவும் விதர்ப்பத்திற்கு முதலில் பல்லின் அடியில் சேர்ந்த தோஷத்தை மண்டலாக்ரத்தால் விலக்கி க்ஷார சூர்ணம் பிரயோகிக்கவும். பிறகு சீதத்ரவ்யத்தால் கபளம், நஸ்யம், முதலியன செய்யவும். தந்தத்தைப்பிடுங்கி வைத்யம் செய்யவும். பிறகு ஐந்து கதிகளுக்கும். மலங்காரை, நெரிஞ்சில், ஜாதி, கருங்காலி, இவை நாலும் வெல்லம் கலந்து தேய்க்கவும். பிறகு நால்பால் மரக்கஷாயத்தால் கபளம் செய்யவும். நால்பால் மரக்கஷாயத்தால் செய்த நெய்யால் நஸ்யமும் செய்யவும். வாத பிரதானமாக இருந்தால் வாதஒஷ்ட கோபத்திற்குச் சொல்லிய மாதிரியும் செய்யவும்.

1064. லோத்திரமுஸ்தாதி : லோத்திரப்பட்டை, கோரைக் கிழங்கு, சதகுப்பை, திரிபலை, மாக்ஷிகம், பத்தங்கம், முள்முருங்கை பட்டை, கட்பலம், இவை கஷாயத்தால் கண்டுஷம் செய்யவும்.

1065. யஷ்டிலோத்ராதி : அதிமதுரம், லோத்திரப்பட்டை, உத்பலம், அருகம்பில், நன்னாரி, அகில், சந்தனம், காவிக்கல், ஜீனி, கரும்பு, இவைகளால் செய்யப்பட்ட தைலத்தால் நஸ்யம் செய்யவும்.

1066. வசாதேஜோவத்யாதி : வசம்பு, சிறுபுன்னையரிசி, (வாலுளுவையரிசி) பாடக்கிழங்கு, ஸர்ஜிக்ஷாரம், யவக்ஷாரம், பேய்ப்புடல், வேப்பம்பட்டை, திரிபலை, இவைகளால் கஷாயம் செய்து கபளம் செய்யவும்.

## ஜிஹ்வாரோக சிகித்சை

வாததூஷிதைக்கு வாதோஷ்ட கோபத்தில் சொல்லியமாதிரி சிகித்ஸை செய்யவும். பித்த தூஷிதையை உரைத்து ரக்தம் களைந்து மதுர ஔஷதங்களால் தேய்த்து நஸ்யம், கபளம், முதலியன செய்யவும். சிலேஷ்ம தூஷிதைக்கு கடுகு, திரிகடு,

முதலிய ரூக்ஷத்திரவியங்களால் நஸ்யம் முதலியன செய்யவும். அலஸத்திற்கும் இவ்விதமே சிகித்சை செய்யவும். இதில் முறிப்பது உரைப்பது முதலியன செய்யக்கூடாது. அதி ஜிஹ்வைக்கு நாக்கைத் தூக்கிப்பிடித்து இடுக்கியால் அதிஜிஹ்வையை எடுத்து மண்டலாக்ரத்தால் முறித்து அவ்விடத்தை சுத்தம்செய்து ரக்தம் நீக்கி உஷ்ண திரவியங்களால் தேய்க்கவும். உபஜிஹ்வையை ஸ்ரவிக்கச்செய்து சவுக்காரத்தால் தேய்க்கவும்.

## தாலுரோக சிகித்சை

உள் நாக்கிற்குத் தாலு எனப்பெயர் அவ்விடத்தில் பிடகை முதலியன கண்டால் சிகித்ஸை மிகவும் ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும் நஸ்யம் கண்டூஷம் லேபம் முதலியன செய்ய வேண்டும். கள சுண்டியில் உடன் கபஹர ஔஷதங்களால் உரைப்பது நஸ்யம் செய்வது கபளம் செய்வது ஆகிய இவை நல்லது வெள்ளரி விதைபோல் தொங்கினுல் அது நாடியில் படாமல் இருந்தால் இடுக்கியால் எடுத்து மண்டலாக்ரத்தால் அதிக நுனியிலும் அதிக அடியிலும் இல்லாமல் முறிக்கவும். முறித்தது அதிகமானுல் ரக்தம் பெருகி மரணம் ஏற்படும். குறைவாக முறித்தால் வியாதி சீக்கிரம் விருத்தி அடையும். மிளகு பாடா, அதிவிடயம், கோஷ்டம், வசம்பு, நாயுருவி, இந்துப்பு, இவை பொடி செய்து தேன் சேர்த்து அறுத்த இடத்தில் தேய்க்கவும், பிறகு வேப்பம்பட்டை, வட்டத்திருப்பி, வசம்பு கடுகுரோகணி, அரத்தை, அதிவிடயம், வெட்டிவேர், இவை கஷாயத்தால் கபளம் (வாயில் நிரப்பி) வைத்துக் கொள்ளவும். தாலு ஸம்ஹதி, கச்சபம், புப்புடம், மூன்றுக்கும் சிகித்ஸை இவ்விதம்தான். ஆனுல் உரைத்தால் போதும். முறிக்கக்கூடாது. அபக்வமான தாலு பாகத்தை அன்னபேதி, மாக்ஷிகம், தேன் கலந்து தேய்க்கவும். மதுர ஔஷதங்களால் செய்யப்பட்ட கஷாயத்தால் சீத கபளம் செய்யவும் பிறகு தீக்ஷ்ண மருந்துகளால் தேய்க்கவும். ஆடாதோடை, வேப்பம்பட்டை, பேய்புடல் முதலிய கசப்பு சாமான்களால் செய்த கஷாயத்தால் கபளம் செய்யவும். தாலுதோஷத்தில் சுக்கு, திப்பிலி, இவை களால் தயார்செய்யப்பட்ட நெய்யைச் சாப்பிடவும். நெய் பால் முதலியதால் நஸ்யம் செய்யவும்.

## தொண்டை நோய்களின் சிகித்சை

இவைகளுக்கு வைத்தியம் செய்யும்பொழுது முதலில் ரக்தத் தைப்போக்கிப் பிறகு தீக்ஷ்ண திரவியங்களால் நஸ்யம் முதலியன செய்யவும். வேப்பம்பட்டை, மரமஞ்சள், வெப்பாலையரிசி,

மாக்ஷிகம் இவைகளின் கஷாயத்தில், அல்லது கடுக்காய் கஷாயத்தில் தேன் சேர்த்துச் சாப்பிடவும். சிரேஷ்டா வியோஷாதி பால் குடிக்கவும். தினசரி கபளமும் தேய்ப்பதும் செய்யவேண்டும். நிசுளம் கடபீத்யாதியால் வீக்கத்திற்குத் தேய்க்கவும். வாத ரோஹணிக்கு கழுத்தின் உள் வெளி இரு பக்கத்திலும் வேது பிடித்து அங்குளிசஸ்திரத்தால் உரைக்கவும். பஞ்சமூல கஷாயத்தால் கபளம் செய்விக்கவும். ஷி கஷாயத்தால் செய்த எண்ணெய்யால் கண்டூஷம், நஸ்யம் செய்யவும்.

பித்தரோஹிணியை நன்ருக உரைத்து ரக்தம் களைந்து ஜீனி, லோத்திரப்பட்டை, ஞாழல்பூ இவை பொடி செய்து தேனில் தேய்க்கவும். பிறகு லோத்திரப்பட்டை, பத்தங்கம் இவை கஷாயத்தால் கபளம் செய்விக்கவும். பேரீச்சை, திராக்ஷை இவை கஷாயத்தாலும் கபளம் செய்விக்கவும்.

ரக்தரோஹிணியிலும் இவைகளையே செய்யவும். சிலேஷ்ம ரோஹிணி, சாலூகம், விருந்தம், துண்டிகேரி கிலாயு இந்த ஐந்திற்கும் ஒட்டரை, கடுதிரவியங்கள் கலந்து பிரட்டவும். பிறகு பெரு நாயுருவி விதை, நாகதந்தி விதை, வாய்விளங்கம், இந்துப்பு இவை சேர்த்துக் காய்ச்சின எண்ணெய்யால் கபளம் செய்விக்கவும். நஸ்யமும் செய்யவும்.

வித்ரதியை ஸ்ரவிக்கச் செய்து கோரோசனை, திரிபலை, இந்துப்பு, காவிக்கல், லோத்திரப்பட்டை, மாக்ஷிகம், திப்பிலி, பத்தங்கம் இவை பிசைந்து கபளமும் செய்து தேய்க்கவும். கள கண்டத்தை வேதுபிடித்து உரைத்து ரக்தம் களைந்து பிரியாளம், அகத்தி, சணல் இவைகளின் விதையை ஜலத்தில் அரைத்துக் கட்டவும். புண் அதிகம் ஆனல் சிக்ரு வில்வாதியால் தேய்க்கவும். குளூசிநிம்பாதி எண்ணெய் சாப்பிடவும்.

சிலேஷ்மகண்டத்தை முந்தியதைவிட அதிகம் வேதுபிடித்து உரைத்து அமுக்கிராக்கிழங்கு, அதிவிடயம், பாலைக்கொடி இவை அரைத்துத் தேனில் குழைத்து நன்ருகத் தேய்க்கவும். வத்ஸகாதி கணத்துடன் பஞ்சலவணம் கலந்து எண்ணெய்க் காய்ச்சிச் சாப்பிடவும். பிறகு கபஹரங்களான ஔஷதங்களால் புகைபிடித்து நஸ்யம், வமனம், முதலியன நித்யமாகச் செய்விக்கவும். மேதோ கண்டத்தில் ஸிராவேதம் செய்து ரக்தம் களைந்து அஸனுதிகண கஷாயத்தை கோமூத்திரம் கலந்து சாப்பிடவும். சவுகரியமாகா விட்டால் கீறிவிட்டு விரண சிகித்ஸை செய்யவும்.

1067. சிரேஷ்டா வியோஷாதி: திரிபலே, திரிகடு, யவக்ஷாரம் மரமஞ்சள், கண்டங்கத்திரி, ரஸாஞ்சனம், பாடா, சிறு புன்னேயரிசி, எலுமிச்சை இவைகளேக்காடி கோமூத்திரம் இவைகளால் சித்தப்படுத்தி கபளமும், குளிகை முதலியனவும் பிரதிஸாரணத்திற்கு நல்லது.

1068. நிசுளம்கடபீத்யாதி: சமுத்திராப்பழம், வாலுளுவை கோரைக் கிழங்கு, தேவதாரு சுக்கு, வசம்பு, நாகதந்திவேர், மருள் இவைகளே அரைத்து இளஞ்சூடாக லேபனம் செய்தால் வலி, வீக்கம் முதலியன சமிக்கும்.

1069. சிக்ருபில்வாதி: முருங்கைப்பட்டை; லோத்திப் பட்டை, தழுதாழை, யானைத்திப்பிலி, வெள்ளேச்சாரணத்தி, காராகில், சீந்திற்கொடி, எருக்கம்வேர், அலரிப்புஷ்பம், சிவதை வேர், இவைகளேச் சம எடையாக எடுத்து கள் அல்லது காடி விட்டு அரைத்து லேபம் செய்யவும்

1070. குடூச்யாதி: சீந்திற்கொடி, வேப்பம்பட்டை, வெப்பாலேப்பட்டை, சிறுபுள்ளடி, சித்தாமுட்டி, பேராமுட்டி, திப்பிலி, தேவதாரு, இவைகளால் தயார்செய்யப்பட்ட தைலத்தை உள்ளுக்கு உபயோகிக்கவும்

1071. வத்ஸகாதி: வெப்பாலே, மருள், சிருதேக்கு, கடுகு ரோகிணி, மிளகு, அதிவிடயம், சதுரக்கள்ளி ஏலம், பாடக்கிழங்கு, ஜீரகம், பெருவாகைக்காய் (பலகப்பய்யாணி), ஓமம், வெள்ளேக் கடுகு, வசம்பு, காட்டுஜீரகம், பெருங்காயம், வாய்விளங்கம், தைவேளே, பஞ்சகோலம் இவைகளின் கஷாயம் முதலியவை முகரோகங்களுக்கு நல்லது.

1072. அஸநாதி: வேங்கை, பனச்சி, பூர்ஜமரம், மருதம் பட்டை, முள்புங்கை, கருங்காலிக்கட்டை, வெள்ளேக் கருங்காலிப் பட்டை, வாகைப்பட்டை, இருள்மரப்பட்டை, (தோதகத்தி எனச் சிலர்) வேலிப்பருத்தி, வெள்ளேச்சந்தனம், சிகப்புச்சந்தனம், மரமஞ்சள், பனே, புரசம்பட்டை, அகில், தேக்குமரம், சாம்பிராணி மரம் பாக்குமரம், தவவிருக்ஷம், வெப்பாலேயரிசி, சாககர்ணம், அலரி, இவைகளின் கஷாயம் முகரோகங்களுக்கு நல்லது,

## உள்வாய் ரோகங்களின் சிகித்சை

முகபாகங்கள் எல்லாவற்றிலும் முகசோதனம் செய்யவும். ஜாதித்துளிர், திராக்ஷை, திரிபலே, வட்டத்திருப்பி, இவை கஷாயம்

வைத்து தேன் கலந்து கபளம் செய்யவும். இந்த மருந்துகளையே வாயில்போட்டு மென்று உமிழவும். குடோரதி கணத்தாலும் இவ்விதம் செய்யலாம். வாத முகபாகத்திற்கு இந்துப்பு, திப்பிலி, ஏலரிசி, இவை தேன்கலந்து தடவவும். வாதஹர தைலங்களால் தயார் செய்யப்பட்ட தைலத்தால் கபளம் நஸ்யம் செய்யவும். பித்தரக்தத்தால் வருவதற்கு பித்தரக்தஹர சிகித்ஸையும் கபத்தால் வருபவைகளுக்கு கபஹர சிகித்ஸையும் செய்யவும். மிகவும் கெட்டியாயும் கனமாயும் உள்ள கட்டிகள் ஏற்பட்டால் அவற்றை உரைத்து விரணசிகித்சை செய்யவும். தோஷத்திற்குத் தகுந்தபடி பார்த்துச் செய்யவும் புதிதாக வளர்ந்த அர்ப்புதத்தை முறித்து சுக்கு ஸர்ஜிக்ஷாரம், தேன்கலந்து தேய்க்கவும் சீந்தில், வேம்பு இவைகளுடன் எண்ணெயும் தேனும் சேர்த்து கபளம் செய்யவும். பிறகு தீக்ஷ்ண தைலத்தால் அப்யங்கம் நஸ்யம், யவான்னபோஜனம் இவை செய்யவும். பூதிவக்த்ரத்தில் வமனம் செய்து வைத்து தீக்ஷ்ணதூபம், நஸ்யம் செய்விக்கவும். ஸமங்காதியால் கபளம் செய்யவும் சீதோபகுசத்தில் சொல்லிய நஸ்யம் சீலிக்கவும்

1073. ஸமங்காதி: மஞ்சிஷ்டி, காட்டாத்திப்பூ லோத்திப் பட்டை, ஞாழல்பூ, பத்மகாஷ்டம் இவைகளின் கஷாயம் அல்லது சூர்ணத்தை உபயோகிக்க முகரோகங்கள் தீரும்.

1074 திரிபலாதி–திரிபலே, கண்டங்கத்திரி, நிலவேம்பு, அதிமதுரம், வெள்ளேக்கடுகு, திரிகடு, கோரைக்கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், யவக்ஷாரம், புளியம்பட்டை, புளிவஞ்சி, அரசம்பட்டை, நாவல்பட்டை, மாமரத்தின்பட்டை, மருதம்பட்டை, அலரிப்பட்டை, கருங்காலிவைரம், இவைகளேக் கஷாயம் செய்து வடிகட்டி அக்கஷாயத்தை அடுப்பேற்றி வற்றவைத்துக் குழம்பாக ஆகும் சமயத்தில் ஷ்ஷி திரவியங்களேச் சம எடையாகப் பொடிசெய்து அந்தப்பொடியையும் அக்கஷாயத்தில் போட்டுக்கிளரிக் குளிகை செய்து வாயில் அடக்கிக்கொள்ள தொண்டை, உதடு, நோய்கள், ரோகிணி முதலிய பல ரோகங்கள் தீரும். இது விதேகதேச அரசனல் சொல்லப்பட்டது.

1075. க்ஷுத்ராதி: கண்டங்கத்திரி, சீந்தில், ஜாதித்துளிர், மரமஞ்சள், செந்தொட்டி, திரிபலே, இவைகளேச் சம எடையாக எடுத்து கஷாயம் செய்து அதில் தேன் சேர்த்துக் கபளம் செய்ய முகரோகங்கள் அனைத்தும் தீரும்.

1076. பீதகசூர்ணம்: மரமஞ்சள் தோல், இந்துப்பு, மனேசிலே, தாளகம், யவக்ஷாரம், இவைகளேச் சம எடையாக எடுத்துப்

பொடிசெய்து தேன், நெய் சேர்த்துக் குளிகைசெய்து வாயில் அடக்கிக்கொள்ள தந்தரோகங்கள், முகரோகங்கள் அனைத்தும் தீரும். மருந்தை வாயில் அடக்கிக்கொண்டு உமிழ்நீரை வெளியில் துப்பிவிடவேண்டும் பிறகு வென்னீரால் வாயைக்கொப்பளித்து விடவும்.

1077. பத்யாயோகம்: கோமூத்திரத்தில் கடுக்காயைப் போட்டு நன்ருக வேகவைத்துப் பதமானவுடன் அக்கடுக்காயை வெட்டிவேர், சதகுப்பை, கோஷ்டம் இவைகளின் கஷாயத்தால் பாவனை செய்து உலர்த்தி அக்கடுக்காயை உள்ளுக்குப் பிரதி தினமும் சாப்பிட்டு வரும் மனிதர்களை முகரோகங்கள் அணுகா. முகம், தொண்டை, எகிர், இவைகளில் வரும் ரோகங்கள் அநேகமாக கபரக்தங்களின் பிரகோபத்தால் உண்டாகின்றன. ஆகவே அந்நோய்களில் கெட்ட ரக்தத்தை ஸ்ரவிக்கச்செய்வது அவசியம். சிரோவிரேசனம், சரீர விரேசனம், வமநம், காரம், கசப்புரசமுள்ள திரவியங்களால் கபளம் கபரக்தஹரங்களான சிகித்சைகள் ஆகிய இவை மிகவும் உத்தமம்.

முகரோக சிகித்சை முற்றிற்று.

## சிரோரோக சிகித்சை

வாத சிரோரோகம் அதிகம் ஏற்படும்பொழுது வாதஹரமான சிகித்சைகள் செய்யவும். வாதத்திற்குச் சொல்லியவற்றை தலையில் தேய்த்துக்கொள்ளவும். இரவு நெய் சாப்பிடவும். உடன் சூடான பால்சாப்பிடவும். பாசிப்பயறு, கொள்ளு, உளுந்து இவைகளை நெய் கலந்து சாப்பிடவும். எள்ளை அரைத்து எண்ணை பால் கலந்து சாப்பிடவும். மாம்ஸம் தான்யம் இவைகளால் பிண்டோபனுஹ(கிளி) ஸ்வேதம் நவரக்கிழி முதலியன செய்யவும். வாதஹரங்கள் தச மூலம் இவைகளால் தயார் செய்யப்பட்ட பால்தாரையும் ஸ்நிக்தங்களான நஸ்யமும் தூபமும் ஹிதம்.

வரணுதிகணத்தில் பாதி ஜலம் சேர்த்துக் காய்ச்சின பாலைக் கடைந்து எடுத்த நெய்யை மதுரத்ரவ்யங்களால் தயார்செய்து அதால் நஸ்யம் செய்வது மிகவும் நல்லது. கார்பாசாதியும் நல்லது. சூடு முதலியன விதிக்குக் கட்டுப்பட்டு செய்யவும். ரக்தமோக்ஷம் செய்யக்கூடாது. வரணுதிகணம் கஷாயத்தில் பால் சேர்த்துக் காய்ச்சின நெய்யை ஜீனி கலந்து சாப்பிட தலைவலிகள் தீரும். இந்த சிகித்ஸைகள் எல்லாம் அர்த்தாவபேதத்திற்கும் செய்யலாம்

பித்தத்தால் உண்டான சிரஸ்தாபத்தில் ஸ்நிக்தனுகச் செய்து ஸிராவ்யதம் செய்யவும். பிறகு தலையில் சீதங்களைத் தேய்த்து தாரையும் பஸ்தியும் தலைக்குச்செய்யவும். ஜீவனீயகணம் சேர்த்துத் தயார்செய்த பால் சாப்பிடவும். அந்த மருந்துகளால் தயாரான நெய்யால் நஸ்யம் நெய்யவும். சங்ககத்தைத்தவிர மற்ற ரக்தஜங்களில் இவ்விதம் செய்யவும்.

சிலேஷ்ம சிரோரோகங்களில் பழைய நெய்யைத் தேய்க்கவும். கடு திரவியங்களால் சமனம் வருத்தவும். தீக்ஷ்ண உஷ்ண ரூக்ஷ மருந்துகளால் ஸ்வேதம், பிரலேபம், நஸ்யம் செய்யவும். உபவாஸம் செய்வது விசேஷம். திரிதோஷ கோபத்தால் ஏற்படுவதற்குக்கலந்து சிகித்ஸைகள் செய்யவும். கிருமிஜதாபம் வரும்பொழுது ரக்தத்தால் நஸ்யம்செய்தால் கிருமிகள் ரக்த கந்தத்தால் மதத்தையடைந்து கிளம்பும். பிறகு வெளியில் வருவதற்கு காயம், நாகதந்தி, சர்ஜிக்ஷாரம், வாய்விளங்கம் இவைகளைக் கோமயத்தில் வேகவைத்து நஸ்யம் செய்யவும். பீலுகம், வேம்பு, கடுகு இவைகளில் ஒவ்வொன்றினுடைய எண்ணெய்யால் நஸ்யம் செய்யவும். வாய்விளங்கத்தை ஆட்டு மூத்திரத்தில் வேகவைத்து நஸ்யம் செய்யவும். நஸ்யத்திற்கு ஏற்பட்ட மருந்துகளுடன் பூதி மத்ஸ்யமும் சேர்த்துப் புகை செய்யவும். ரக்தமோக்ஷம் செய்யக்கூடாது.

சிரக்கம்பத்திற்கு வாதாபிதாபத்தில் சொல்லியமாதிரி எல்லாம் செய்யவும். சூடுபோடக்கூடாது. பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படும் உபசிரஸ்ஸிற்கு வித்ரதிக்கு போல் செய்யவும். பக்வமாவதற்கு முன் வாதத்திற்குப்போல் செய்யவேண்டியது. பழுத்தால் வித்ரதிபிடகம் அர்ப்புதம் இவைகளைப்போல செய்யவும். தோஷத்திற்குத் தகுந்த மாதிரி செய்யவும்.

அரும்ஷிகையில் ரக்தத்தை அட்டைவிட்டு குடிக்கச்செய்து எலுமிச்சம்பழரஸத்தால் கழுவி குதிரைலத்தியைப் பிழிந்த ரஸத்தில் இந்துப்பு கூட்டித்தேய்க்கவும். மஞ்சள் சேர்த்து அரைத்த பேய்புடல், அல்லது வேப்பிலையை, கோமூத்திரம் சேர்த்துத் தேய்க்கவும். கண்டு முதலியன தீரும். அரும்ஷிகைக்கும் சாசைக்கும் மாலதீ, சித்ரமூலம், அலரி புங்கை இவைகளால் எண்ணெய் வடித்துத்தேய்க்கவும். அரக்கு கஷாயம் வைத்து வாசனைப்புல், நெல்லிக்காய் கொன்னையிலை, வெற்றிலை பாதரஸம் சமம் சேர்த்து அரைத்துக் காய்ச்சின தைலத்தைத் தேய்க்கவும். இதிலும் குணம் ஆகாவிடில் வமனம் முதலியன செய்துவைக்கவும்.

தாருணகத்திற்கு நெற்றியில் ரக்தம்போக்கி சுத்திசெய்து தூமம் நஸ்யம் வஸ்திசெய்து பிறகு உளுந்து, கடுகு கோஷ்டம், பிரியாளத்தின் விதை அதிமதுரம், இந்த ஐந்தும் தேன் சேர்த்துத் தேய்க்கவும். பிறகு க்ஷார ஜலத்தால் அலம்பவும். இந்திரலுப்தத்தில் ஸிராவேதம் செய்து ரக்தம்போக்கி சகஸ்ரபேதி கன்னுரம், கல்மதம், ஜீரகம், திப்பிலி, அதிமதுரம், அமுக்கிராக்கிழங்கு, சுக்கு, நெரிஞ்சில்முள், இவை சூர்ணம் செய்து பாலில் சாப்பிடவும்.

(சிரோரோக சிகித்சை முற்றிற்று.)

## பலவகை

பலவகை என்ற இந்த அத்தியாயத்தில் பலவித நோய்களுக்குப் பலவித மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த அத்தியாயத்தில் ஸஹஸ்ரயோகத்தில் இல்லாத சில யோகங்களும் (எழுத்துப்பிரதியிலுள்ள) சேர்க்கப்பட்டிருக்கின்றன.

1078. மஹாமதுஸ்நுஹீ ரஸாயணம்: திரிகடு, திரிபலே, ஏலம், இலவங்கப்பட்டை, பச்சிலே, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கொடுவேலி வேர், கிராம்பு, மல்லி விதை, சிறு ஜீரகம், பெருஞ் ஜீரகம், கருஞ்ஜீரகம், வாய்விளங்கம், செவ்வியம், கோஷ்டம், சிவதை, தேசாவரம், அமுக்கரா வேர், சிறு தேக்கு, வாலுளுவை அரிசி, சிறுநாகப்பூ வகைக்கு 6 கிராம். இவைகளே இடித்து வஸ்திரகாயம் செய்து சுத்தி செய்த கந்தகம், குக்கில், பரங்கிப் பட்டை இவை வகைக்கு 100 கிராம், நெய் 300 கிராம், சீனி 300 கிராம் இவைகளேச் சேர்த்துக் கலக்கி பத்திரப்படுத்தி தினம் காலேயில் 6 கிராம் உபயோகிக்க சர்ம நோய், சொரி சிரங்கு, பிரமேஹம், பவுத்தரம், மூலம், அர்புதம், கண்டமாலே, வாதரக்தம், அரிப்பு, மேஹநோய்கள், குஹ்யவிரணங்கள் முதலிய ரோகங்கள் சமிக்கும். பத்தியம் – புளி நல்லெண்ணெய் முதலியவை நீக்கவும்.

குறிப்பு: கந்தகத்தைப் பொடி செய்து கரிப்பான் ரசத்தில் மூன்று பாவனே செய்யவும் பிறகு வெய்யிலில் உலர்த்தி நன்ருகப் பொடித்து ஓர் இரும்புக்கரண்டியில் போட்டுத் தணலில் வைக்க உருகும். உருகினவுடன் தாமதிக்காமல் கரிப்பான் ரசத்தில் சாய்க்கவும் பிறகு எடுத்து வெய்யிலில் உலர்த்தி நன்ருகப் பொடி செய்துகொள்ளவும். இது கந்தகசுத்தி,

குக்கிலே க்கல் குச்சியில்லாமல் பொறுக்கி திரிபலே கஷாயத்தில் வேகவைத்து வெய்யிலில் உலர்த்திக்கொள்ளவும். இது குக்கில் சுத்தி. பரங்கிப்பட்டையை இடித்துப் பொடி செய்து சின்னப்படி

ஒரு படி பசும்பாலை ஓர் மண் கலயத்தில் போட்டு கலயத்தின் வாய்க்கு ஓர் வெள்ளைத்துணி மூடிகட்டி அதின்மேல் சூர்ணத்தை வைத்து மேல்வாய்க்கு சட்டிமூடி அடுப்பேற்றி தீயிட்டு எரித்து எடுத்துக்கொள்ளவும். இதை புட்டவித்தல் என சாதாரண ஜனங்கள் சொல்லுவார்கள். அதாவது பசும்பாலின் ஆவியில் வெந்து போவது பரங்கிப்பட்டைக்குச் சுத்தியாகும். பிறகு வெய்யிலில் காயவைத்துப் பொடி செய்துகொள்ளவும்.

மதுஸ்நுஹீ ரஸாயனம் செய் முறை: கடைச்சரக்கு மொத்தம் 26. இதை நன்ருக இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொள்ளவும். கந்தகம் நீங்கலாக மற்ற இரண்டு சாமான்களை அதாவது பரங்கிப்பட்டையையும், குக்கிலையும் நன்ருகப் பொடி செய்து கொள்ளவும். குக்கிலை மாத்திரம் தனி யாகக் கல்வத்தில் பொடி செய்து கொள்ளவும், பிறகு ஓர் இரும்பு பாத்திரத்தை அடுப்பேற்றி கொஞ்சம் ஜலம் விட்டு அதில் முதலில் குக்கிலைப்போட்டுத் தீயிட்டு அது நன்ருக ஜலத்துடன் கரைந்து போகும்படி செய்யவும். ஜலம் போதாவிட்டால் மறுபடியும் ஜலம் விட்டுக்கொள்ளவும். நன்ருகக் கரைந்து சந்தனவிழுதுபோல வரும் சமயத்தில் ஜீனியைக்கலக்கவும். நன்ருக சட்டுவத்தால் கிளரிக்கொடுக்கவும். நெய்யையும் கந்தகப்பொடியையும் நீங்கலாக மற்றப்பொடிகளைப் போட்டு நன்ருகக்கிளரி கலக்கவும். பிறகு அடுப்பைவிட்டு இறக்கி நன்ருக ஆறினபிறகு கந்தகப்பொடியைத் தூவி நன்ருகக்கலக்கவும் சூட்டுடன் கந்தகப்பொடியைச் சேர்த்தால் சகிக்கமுடியாத நாற்றமடிக்கும். மருந்து சாப்பிடுவது கஷ்டமாகும். பிறகு தேனைவிட்டு நன்ருகக்கலந்து ஜாடியில் போட்டு மூடி தான்யபுடம் வைத்திருந்து பிறகு அளவுப்படி உபயோகிக்கவும். பத்தியம் கடுமையாக இருக்கவேண்டும்.

1079. சுவாஸாநந்த குளிகை: லிங்கம் 50 கிராம் எடுத்து முலைப்பாலில் அரைத்துக்கொள்ளவும். நாவிக்கிழங்கு 50 கிராம் அடியில்கண்டவிதமாகச் சுத்திசெய்து எடுத்துக் கல்வத்திலிட்டு முன்சொன்ன லிங்கத்தையும் சேர்த்து ஜீரகக்கஷாயத்தால் மூன்றுஜாமம் அரைத்து அதில் பச்சைக்கர்ப்பூரம் 50 கிராம் சேர்த்து முன்சொன்ன கஷாயத்தில் அரைத்து குன்றுமணிபோல் உருட்டி நிழலில் உலர்த்தி ஒரு குளிகையை முலைப்பாலில் கரைத்து கல்கண்டு பொடியும் சேர்த்துச் சாப்பிடவும். ஜீரகக் கஷாயத்திலும் சாப்பிடலாம். காஸம், சுவாஸம் தீரும். ஸந்நிபாதத்தில் நன்மை செய்யும்

# PURI BROTHERS (REGD.)

**Musk, Saffron and Indian Drugs Merchants**

## JULLUNDUR-1

Tele: "VENKATESH" Phone: 3923

**PRICE LIST FOR 1970**

| Item | | Rs. P. |
|---|---|---|
| Pure Musk | per gram | 35-00 |
| Pure Saffron | ,, | 1-75 |
| Pure Gorochanam | ,, | 9-00 |
| Pu.e Pearls special | ,, | 10-00 |
| Pure Pearls No, 2. | ,, | 8-00 |
| Pure Pearls No. 3. | ,, | 6-00 |
| Pure Amber No. 1 | per gm. | 4-00 |
| Pure Amber No. 2 | ,, | 3-50 |
| Pure Amber No. 3 | ,, | 3-00 |
| Pure Amber Black | ,, | 1-00 |
| **PACHAKARPURAM** | | |
| Spl Bhimseni | per gram | 0-25 |
| Singapuri (Yellow) | ,, | 0-20 |
| German or Japan | | 0-20 |
| Ashtavargam | per Kilo | 14-00 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kashir Kakoli | ,, | 14-00 |
| Ridhi Vridhi | ,, | 12-00 |
| Suryatapi Silajit No. 1 | per Kilo | 100-00 |
| No. 2. | ,, | 85-00 |
| **BHASAMS** | | |
| Rajit Bhasam | per K. G. | 1000-00 |
| Tamber Bhasam | ,, | 220-00 |
| Abhrak (100 times) | ,, | 230-00 |
| Abhrak (60 times) | ,, | 160-00 |
| Bang Bhasam | ,, | 160-00 |
| Akik Bhasam | ,, | 50-00 |
| Shilajit | ,, | 30-00 |
| Annabedi Bhasam | ,, | 30-00 |
| Swaran Makshika | ,, | 60-00 |
| Nag Bhasam | ,, | 120-00 |
| Pearl Bhasam | per ten gram | 100-00 |
| Parda Bhasam | ,, | 10-75 |

| Item | | Rs. P. |
|---|---|---|
| Hingul Bhasam | per ten gm. | 10-75 |
| Loh Bhasam (special) | per K. G. | 130-00 |
| Loh Bhasam No. 1 | ,, | 75-00 |
| Mandur Bhasam | ,, | 30-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Shring Bhasam | ,, | 30-00 |
| Vaikrant Bhasam | ,, | 180-00 |
| Hartal Godanti | ,, | 30-00 |
| Kant Loh Bhasam | ,, | 250-00 |
| Parwal Bhasam | ,, | 175-00 |
| **PILLS (GUTTIKA)** | | |
| Agnitundi Vati | per ten gm. | 1-00 |
| Basant Kushmakar | ,, | 50-00 |
| Chander Odya Ras | ,, | 40-00 |
| Sanjeevani Vati | ,, | 6-00 |
| Eladi Vati | per K. G. | 35-00 |
| Echha Bhedi Ras | ,, | 60-00 |
| Kaf Ketu Ras | ,, | 50-00 |
| Kan Kayan Vati | ,, | 45-00 |
| Khadi Radi Vati | ,, | 45-00 |
| Lavangadi Vati | ,, | 120-00 |
| Mritunjaya Ras | ,, | 125-00 |
| Mandur Vati | ,, | 40-00 |
| Sankh Vati | ,, | 50-00 |
| Shul Gaj Kesar Vati | ,, | 80-00 |
| Nityodit Ras | ,, | 125-00 |
| Chander Prabha Vati | | 60-00 |
| Maha Jograj Guggal | ,, | 110-00 |
| Jograj Guggal | ,, | 35-00 |
| Kishore Guggal | ,, | 33-00 |
| Kanchanar Guggal | ,, | 35-00 |
| Raj Parsadani Vati | 30 pills | 1-00 |
| Mridu Virechan | 1000 ,, | 16-00 |
| Leucorhin | 1000 ,, | 50-00 |
| Kasari Pills | 1000 ,, | 30-00 |

5% Commission will be allowed on all orders received direct by us

# இம்ப்காப்ஸ்

## பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.


IMPCOPS

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:

4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520
48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.
27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP-/747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினல்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

**சக்தி விலாஸ வைத்தியசாலா**

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma. Published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.